'2

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி II (வெளிவாரி) - 2004/05
## (ஒக்டோபர்/நவம்பர் – 2006)

## SOC 302 – உயர்தர சமூகவியல் கோட்பாடுகள்

நேரம்: 3 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

---

1. "சமகால சமூகவியல் கோட்பாட்டினை விளங்கிக் கொள்வதற்கு தொல்சீர் சமூகவியல் கோட்பாட்டின் மீள்பரிசோதனை அவசியமாகின்றது." இக் கூற்றினை ஆராய்க.

2. "சமூகத்தை ஆய்வு செய்ய புறவயத்தன்மையே பொருத்தமானது" எனும் நேர்நிலைவாதிகளின் கருத்தை ஏற்றுக் கொள்கின்றீரா? விளக்குக.

3. இன்றைய சமூகத்தில் கார்ல் மாக்ஸின் (Karl Marx) வர்க்கப் போராட்டம் பொருந்துவதை உதாரணத்துடன் விளக்குக?

4. கார்ல் மார்க்ஸினதும் (Karl Marx), மக்ஸ் வெவரினதும் (Max Weber) முதலாளித்துவம் தொடர்பான கருத்துக்களை ஒப்பிடுக?

5. சமூக விஞ்ஞானங்கள் கருத்துச் சார்ந்த தோற்றப்பாடுடையன எனும் மக்ஸ் வெவரின் கூற்றை விமர்சனம் செய்க?

6. கட்டமைப்புவாதியாக லெவி-ஸ்ரோஸசை (Levi-Strauss) நீர் எவ்வாறு விளங்கிக்கொள்வீர்?

7. இன்றைய சமூகம் பற்றிய பகுப்பாய்விற்கு செயற்பாட்டுவாதம் எத்தகைய வகையில் பொருத்தமானது என்பதை ஆராய்க?

8. வியாக்கியானிப்பு வாதத்திற்கும், விமர்சனவியல் வாதத்திற்குமிடையிலான வேறுபாடுகளை ஆராய்க?

9. "பின்நவீனத்துவ சிந்தனைகள் சமூகத்தை விளங்கிக்கொள்ள உதவுகின்றன" ஆராய்க?

10. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
    - I. கட்டமைப்பு வாதத்தில் இருமை பற்றிய கருத்து.
    - II. தொழிற்பிரிப்பு பற்றிய எமைல் டேர்கைமின் கருத்துக்கள்.
    - III. ஹேபமாசினுடைய (Habermas) உகந்த பேச்சுக்குரிய நிலமை(Ideal Speech Situation)
    - IV. பணிக்குழு ஆட்சி (Bureacracy) பற்றிய மக்ஸ்வெவரின் கருத்துக்கள்.

(100 புள்ளிகள்)